மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 72, திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

72—

கோயில் குடமுழுக்கு

***37594—திரு. கே.சி. கருப்பணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் உள்ள செல்லியாண்டியம்மன் திருக்கோயிலில் குடமுழுக்குச் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அருள்மிகு செல்லியாண்டியம்மன் திருக்கோயில் கடந்த 1995 ஆம் ஆண்டு பவானியிலுள்ள இந்து ஆலய பாதுகாப்பு கமிட்டியினர் மற்றும் உபயதாரர்கள் மூலம் 15-7-1995ல் குடமுழுக்கு சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடியவில்லை. எனினும் 12 ஆண்டுகள் முடியும் முன்பே இங்கே திருப்பணி செய்ய வேண்டுமென்று அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் விரும்புகிற காரணத்தினால், அந்த ஆலங்களில் போதிய நிதி வசதி இருக்கிற காரணத்தினால் அந்தப் பகுதி மக்களுடைய வசதிக்கேற்ப அங்கே இராஜகோபுரம் கட்டி, குடமுழுக்குச் செய்ய கோயில் நிருவாகமும் மற்றும் ஊர் பொதுமக்களும் முன்வந்திருக்கிற காரணத்தினால் அங்கே அந்தப் பணி நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்தர்களுக்கு முதலிடம் கொடுத்தும், பசிப் பிணியைப் போக்க கோயில்களிலே அன்னதானத் திட்டம் தந்தும், 6,000 ஆதிதிராவிடர்

திருக்கோயில்களுக்கு இப்போது 25,000 ரூபாய் நிதி கொடுத்தும், பக்தர்களைக் காத்துக்கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், ஜமுக்காளம் நகரம் என்று பெயர் பெற்ற பவானி நகரில் அமைந்துள்ள அருள்மிகு செல்லியாண்டியம்மன் திருக்கோயிலில் இப்போது கோபுரம் சிறிது பழுதடைந்துள்ளதால் 12 ஆண்டுகள் நிறைவைப் பெறாமலேயே கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று அங்குள்ள சிவ பக்தர்கள் சங்கமும், முருக பக்தர்கள் சங்கமும் விருப்பம் தெரிவித்துள்ளன. அதற்குண்டான நிதியையும் இப்போது அவர்கள் வசூல் செய்து வைத்திருக்கிறார்கள். ஆகவே அதற்கு உடனடியாக திருப்பணி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில்— தமிழகத்தில்— இந்த மாமன்றத்தில் எத்தனையோ முதலமைச்சர்கள் பொறுப்பேற்றுப் பணியாற்றியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்ததால்தான், இப்போது வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஏழை எளிய மக்களுடைய ஆலயங்களுக்கும் திருப்பணி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், 6,000 ஆலயங்களைத் தேர்வு செய்து திருப்பணி செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆன்மீக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற காரணத்தினாலே, நீங்கள் கூறிய அந்த ஆலயங்களுக்கு இந்த ஆண்டே திருப்பணிகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 73, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

73—

கிராமத்தில் மருத்துவ சிகிச்சை

***8664—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—